செ.வெ.எண்: 1161 நாள்: 31/12/10

# அரசு பத்திரிக்கைச் செய்தி

## ரூ.2.50 கோடி செலவில் புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி வட்டம், தண்டலை கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டி மும்பாலை மற்றும் வடக்கு மணமேல்குடி ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம்

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி வட்டம், தண்டலை கிராமத்தில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் வெள்ளாற்றின் குறுக்கே ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அணை கட்டி மும்பாலை மற்றும் வடக்கு மணமேல்குடி ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம், மும்பாலை மற்றும் வடக்கு மணமேல்குடி ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்ல அதன் கால்வாய்களை சீர்திருத்தம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய ஏரிகளின் வாயிலாக ஏற்கனவே பாசனம் பெறும் 358 ஏக்கர் நிலங்கள் உட்பட மொத்தமாக 457 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அதன் வாயிலாக 616.00 மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை அடைய முடியும்.

கி.தனவேல்
அரசுச் செயலாளர்

// உண்மை நகல் //

வெளியீடு; இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

பிரிவு அலுவலர்